| | | |
|---|---|---|
| | **வலயக் கல்வி அலுவலகம் - கல்முனை**<br>**மூன்றாந் தவணைப் பரீட்சை - 2024** | |
| **தரம் 10** | **தமிழ் மொழியும் இலக்கியமும் -** | **3 மணி 10 நிமிடம்** |

## பகுதி - I

**தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. 'சிறுமீன் சினையினும் நுண்ணிதே' இங்கு நுண்ணிது என்பது
    1. பெரியது 2. சுவையானது 3. மிகச்சிறியது 4. மிகப் பெரியது

02. 'நாயனையார் கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும்' கேண்மை என்பதன் ஒத்தகருத்து அல்லாதது
    1. நட்பு 2. பகைமை 3. நேர்மை 4. வன்மை

03. 'தண்டேன் நுகரா மண்டுகம்' இங்கு மண்டுகம் என்பது
    1. பல்லி 2. வண்டு 3. தவளை 4. குவளை

04. 'பொய்மை சேர் மதியினில் புலைநாத்திகம் கூறுவர்' நாத்திகம் என்பதன் எதிர்க்கருத்து
    1. ஆத்திகம் 2. சாத்வீகம் 3. லௌகீகம் 4. பௌதீகம்

05. 'கன்று பிரிகாராவின் துயருடைய கொடிவினவ' இங்கு காரா என்பது
    1. காளை 2. எருது 3. புனிற்றா 4. நாம்பன்

**பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06. ீயஅிாடநவ என்ற சொல்லிற்கான தமிழ்ச்சொல் யாது ?
    1. முன்னுரை 2. துண்டுப்பிரசுரம் 3. குறியாக்கம் 4. சுயசரிதை

07. 30 வது ஆண்டு இறுதியில் எடுக்கப்படும் விழா
    1. மாணிக்க விழா 2. பவள விழா 3. அமுதவிழா 4. முத்து விழா

08. அவன் கந்தோருக்கு வேலைக்கு சென்றான். கந்தோர் என்பது
    1. இந்தி மொழி 2. பாரசீக மொழி 3. பிரான்சிய மொழி 4. ஒல்லாந்து மொழி

09. இராவணனின் உடலில் இருந்து சென்ற இரத்தம் கடல் நீரையும் செந்நீராக்கியது. இங்கு பயின்றுள்ள அணி
    1. உருவகம் 2. உவமை 3. தற்குறிப்பேற்றம் 4. உயர்வு நவிற்சி

10. எதிர்ப்பொருள் இணைமொழியாக வருவது
    1. வாடி வதங்கி 2. அக்கம் பக்கம் 3. ஏற்ற இறக்கம் 4. ஆறித்தேறி

11. வேய், கழை, முடங்கல் என்ற பொருளைத் தரும் சொல்
    1. மயக்கம் 2. முகில் 3. மூங்கில் 4. கடிதம்

12. மிக அழகான பூ என்பதில் தலைமை உறுப்பாக அமைவது

1. பூ 2. மிக 3. அழகான 4. மிக அழகான

13. ஆயுள் முழுவதும் பிரம்மச்சரியம் காத்து வாழ்பவன்
    1. நைட்டிகன் 2. தபுதாரன் 3. ஆசாடபூதி 4. தீர்க்கதரிசி

14. வேந்தரால் செய்யப்படும் சிறப்பு எவ்வாறு அழைக்கப்படும் ?
    1. மஞ்சரி 2. மெய்க்கீர்த்தி 3. நிந்தகம் 4. மாராயம்

15. தோள் கொடுத்தல் எனும் மரபுத் தொடரின் கருத்து
    1. உதவி செய்தல் 2. அழித்தல் 3. திருடுதல் 4. ஏமாற்றுதல்

16. பன்மை விகுதி பெறாத சொல் யாது ?
    1. கல் 2. தலை 3. நீர் 4. பாறை

17. தச்சன் என்பதன் பெண்பால் சொல்
    1. தச்சி 2. தச்சச்சி 3. தச்சிச்சி 4. தச்சள்

18. பொருத்தமற்ற சொற்களின் இணைப்பு
    1. வாதி - பிரதிவாதி 2. அருள் - மருள்
    3. தமர் - பிறர் 4. தெவ்வர் - பகைவர்

19. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும் என்பதன் பொருள்
    1. கொடைச்சிறப்பு 2. சுயநலப்பண்பு
    3. சேமிப்பின் வலிமை 4. கஞ்சத்தனத்தின் விளைவு

**பின்வரும் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

20. பின்வருவனவற்றுள் தோன்றல் விகாரமாக வருவது
    1. பனையோலை 2. கடற்கரை 3. கடலலை 4. பற்பசை

21. குளக்கரை என்பது எவ்வகைத் தொகைநிலை
    1. வேற்றுமைத்தொகை 2. வினைத்தொகை
    3. பண்புத்தொகை 4. உவமைத்தொகை

22. ‘குமார் பொரியல் உண்டான்’ இதில் பொரியல் என்பது
    1. பொருளாகு பெயர் 2. தொழிலாகு பெயர்
    3. இடவாகு பெயர் 4. காலவாகு பெயர்

23. மகனே கேள் இதில இடம்பெறக்கூடிய நிறுத்தக்குறி
    1. மெய்ப்பாட்டுக்குறி 2. உறுப்பிசைக்குறி
    3. மேற்கோள் குறி 4. காற்புள்ளி

24. பின்வருவனவற்றுள் எதிர்கால இடைநிலையாக வருபவை
    1. த், ற் 2. ன், ற் 3. இன், கின்று 4. ப், வ்

25. கல்வியில் பெரியன் கம்பன்
    அப்பா வீட்டில் இருக்கிறார்
    இவ்வாக்கியங்களில் வரும் ‘இல்’ உருபு ஏற்று வரும் வேற்றுமைகள் முறையே
    1. 6, 7 2. 2, 3 3. 5, 7 4. 4, 7

26. பின்வருவனவற்றுள் ‘ச’ கரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
    1. பசை 2. இசை 3. வீசு 4. மஞ்சள்

27. மரத்தால் விழுந்தவனை மாடு மிதித்தது. இங்கு விழுந்தவனை என்பது
    1. இடுகுறிப் பெயர் 2. காரணப்பெயர்
    3. மாற்றுப் பெயர் 4. வினையாலணையும் பெயர்

28. கண்டனன் என்பதைப் பிரித்தெழுதினால் வருவது
    1. கண்ட்ட்அன் 2. காண்ட்ட்அன்

3. காணுட்ஃஅனுஅன் 4. கணுட்ஃஅனுஅன்

29. பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவு செய்க.
   1. பொதுப்பெயர் : முதலாளி, அகதி, நீதிபதி
   2. தொழிற்பெயர் : ஓடுதல், ஆடல், இருத்தல்
   3. இடுகுறிப்பெயர் : மண், மலை, நாற்காலி
   4. காரண இடுகுறிப்பெயர் : அந்தணன், முக்கண்ணன், முள்ளி

30. பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவு செய்க.
   1. வினைத்தொகை : சுடுசோறு, ஏவுகணை, கொல்களிறு
   2. உவமைத்தொகை : பவளவாய், வாள்விழி, முகமதி
   3. பண்புத்தொகை : கரும்பலகை, வட்டமேசை, அறுசுவை
   4. உம்மைத்தொகை : எண்ணெழுத்து, உயிர்மெய், இராப்பகல்

**புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. பரிசோதகர்கள் குழு பற்றுச்சீட்டுக்களைப் ...............................................
   1. பரிசோதித்தனர் 2. பரிசோதிப்பார்கள்
   3. பரிசோதித்தது 4. பரிசோதிக்கின்றனர்

32. அடுத்த வாரம் முதல் அனைத்துப் பாடசாலைகளும் வழமை போன்று ..............................
   1. நடைபெறும் 2. நடைபெறுகின்றன
   3. நடைபெற்றது 4. நடைபெறுகிறது

33. அப்பாவோடு மகனும் கொழும்புக்குச் ............................................
   1. சென்றனர் 2. செல்வர் 3. செல்கின்றனர் 4. சென்றான்

34. அரசாங்கத்தின் புதிய அமைச்சர்கள் பற்றிய தகவல்கள் அரச ..................................... வெளியிடப்பட்டன.
   1. விஞ்ஞாபனத்தில் 2. சுற்றறிக்கையில் 3. வர்த்தமானியில் 4. அறிக்கையில்

35. நீ நன்றாகப் படித்தால் பரீட்சையில் சித்தி ..................................
   1. அடைந்திருப்பாய் 2. அடைவாய் 3. அடைந்திருக்கலாம் 4. அடைவான்

36. கடும் மழை காரணமாக விளையாட்டுப் போட்டிகள் ................................
   1. பிற்போடப்படும் 2. பிற்போடப்பட்டுள்ளன
   3. பிற்போடப்பட்டுள்ளது 4. பிற்போடப்படுகின்றன

**பின்வரும் பாடலை அடிப்படையாகக் கொண்டு அதன் கீழ் தரப்படும் வினாக்களுக்கு விடை தருக.**

ஆடை அணிகலன்கள், ஆசைக்கு
வாசமலர் தேடுவதும்
ஆடவர்க்குச் சேவித்திருப்பதும்
அஞ்சுவதும் நாணுவதும் ஆமையைப் போல் வாழுவதும்
கெஞ்சுவதுமாகக் கிடக்கும் மகளிர்க்குலம்
மானிடர் கூட்டத்தில் வலுவற்ற ஓர் பகுதி

37. இக்கவிதையின் மையக்கருத்து
1. தற்பெருமை 2. பெண் கல்வி
3. பெண் விடுதலை 4. பெண் கொண்டிருக்கும் குறைபாடு

38. நாணம் என்பது
1. கவலை 2. மகிழ்ச்சி 3. வெறுப்பு 4. வெட்கம்

39. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள அணி
1. உருவகம் 2. உவமை 3. உயர்வு நவிற்சி 4. தற்குறிப்பேற்றம்

40. ஒழுங்கின்றிக் கிடக்கும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி பந்தியாக்கும் முறை
அ. அது உலகம் முழுவதும் பொருத்தமான அறங்களை எடுத்துரைக்கிறது
ஆ. அவற்றுள் திருக்குறள் ஈடு இணையற்றது
இ. இது பழைமையான நாகரீகம் படைத்த நாடு
ஈ. அங்கே சங்ககாலம் எனப்படும் பழங்காலத்திலிருந்து பல நூல்கள் தோன்றின.
உ. தமிழ்நாடு பாரத கண்டத்தின் தென் பகுதியில் உள்ளது

1. இ, ஈ, அ, உ, ஆ 2. அ, ஆ, இ, உ, ஈ
3. உ, இ, ஈ, ஆ, அ 4. உ, ஈ, ஆ, அ, இ

(40 புள்ளிகள்)

---

## தமிழ் - ஐஐ

01. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

01. பின்வரும் தொடரை சந்தி பிரித்து எழுதுக.
'அறந்தானே யென்கின்ற வயனின்றா டனைநோக்கி'
02. 'மகேன் ஒனக்கு நன்ம கெடக்கும் இதக் கொஞ்சம் குடுத்துட்டு வா'
இப்பேச்சு வழக்குத் தொடரை எழுத்துவழக்காக மாற்றி எழுதுக.
03. பின்வரும் சொற்களில் இயல்புப் புணர்ச்சியாக வரக்கூடிய சொற்கள் யாவை?
பனையோலை, கடலலை, தேனலர், பூவரும்பு, பலாப்பழம்
04. பின்வரும் வாக்கியத்தை மயக்கம் நீக்கி எழுதுக.
இலவச நடமாடும் மருத்துவ முகாம் இன்று நடைபெற்றது.
05. தனி வாக்கியங்களைக் கூட்டு வாக்கியமாக்குக.
• இலங்கை சிறந்த நீர்வளமும் நில வளமும் உடையது.
• இலங்கை கடன் வழங்குவதில் பல நாடுகளுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது.
06. வழுநீக்கி எழுதுக.
தேர்தல் பிரச்சாரத்தின்போது கலாச்சார விழுமியங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.
07. எழுவாய், பயனிலையை இனங்காண்க.
'தேனாய் வடிகின்ற அருவியில் குளித்திருப்பாய் நண்பர்களோடு'
08. 'கரை' எனும் சொல் வினையாகவும் பெயராகவும் வரும் வகையில் தனித்தனி வாக்கியங்கள் அமைக்குக.
09. வெற்றி மாலை அணிந்த ஆடவர் திலகனே இவர் யார் என்று குகன் வினவினான் - பொருத்தமான நிறுத்தக் குறிகளை இட்டு மீண்டும் எழுதுக.

10. பின்வரும் தொடர்களில் காணப்படும் தொகைநிலைகளை இனங்காண்க.
இனிப்படை, உயிர்மெய், குரைகடல், மலர்விழி

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிந்து 250 சொற்களில் அமையுமாறு எழுதுக.

அ. தற்காலத்தில் உடனடி உணவுகள் என்ற போர்வையில் எமது சமுதாயத்தை உணவுப் பழக்கமானது தன்பக்கம் இழுத்து வைத்திருக்கிறது. பாரம்பரிய உணவுப் பழக்கத்திலிருந்து விடுபட்டு உடனடி உணவுப் பழக்கத்திற்கு ஆளானமையால் அவற்றின் தாக்கம் எமக்கு பலவித நோய்களை உண்டாக்கி மருந்தும் கையுமாக அலைய வோண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இத்தகைய உடனடி உணவுப் பழக்கம் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் பற்றிய விளக்கக் கட்டுரை

ஆ. சிறுவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்ட வேண்டும் என்பது எல்லோரினதும் அவாவாகும். இருப்பினும் அவ்வப்போது சிறுவர் உரிமை மீறல்கள் உலகின் பல்வேறு இடங்களிலும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. அத்தகைய சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு பேணப்பட வேண்டியதன் அவசியம் குறித்து சர்வதேச சிறுவர் தினக்கொண்டாட்டத்தில் நீர் ஆற்றிய சொற்பொழிவு.

இ. இன்றைய காலகட்டத்தில் நிகழ்நிலைக் கற்பித்தல் மூலமான கல்வி நடைமுறையில் உள்ளது. இதற்கு இணையம், இலத்திரனியல் ஊடகங்களும் இன்றியமையாதனவாகக் காணப்படுகின்றன. இருப்பினும் சிலர் வகுப்பறைக் கல்வியே சிறந்தது என வாதிட்டு வருகின்றனர். அந்தவகையில் நிகழ்நிலைக் கல்வியே சிறந்தது என வாதிடும் ஒருவருக்கும் வகுப்பறைக் கல்வியே சிறந்தது என வாதிடும் ஒருவருக்குமிடையேயான உரையாடல்.

ஈ. கற்றலில் சிறந்தவனான குமரன் கெட்ட சினேகிதர்களின் சேர்க்கையினால் படிப்பை இடையில் விட்டு விடுகிறான். பின்னர் கட்டிட கட்டுமானத் தொழிலுக்கு சென்ற இவன் மிகவும் அவஸ்தைப்படுகிறான். தான் கல்வியைத் தொடராததை நினைத்து வருந்துகிறான். அன்றிலிருந்து உறுதியான ஒரு முடிவை எடுக்கிறான். இதை தொடக்கமாகக் கொண்ட சிறுகதை.

03. பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 40-45 சொற்களில் அமையுமாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

நம் நாட்டின் மிகப்பெரும் தொழில்நுட்ப, தொழில்துறை சாதனைகள் இளம் பெண்கள், ஆடவர்களால் நிகழ்ந்துள்ளன. இச்சாதனைகளை நிகழ்த்தியவர்கள் சாதாரணப் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் பயின்றவர்கள்; இலங்கை பூர்வீகம் கொண்ட பல இலட்சம் இளைய தலைமுறையினர் பல்வேறு நாடுகளில் தங்கி பணிபுரிகின்றனர். அவர்கள், இலங்கை தொழில்நுட்ப பயிலகங்களிலோ, பெருமைமிக்க நிறுவனங்களிலோ கற்றவர்கள் அல்லர்.

இலங்கையின் சாதாரண நிறுவனங்களில் இருந்து வந்தவர்கள். அவர்களில் மருத்துவர், பொறியியலாளர், தொழில்நுட்ப வல்லுநர், தாதியர், ஓவியர், எழுத்தாளர், இதழாளர், கணக்கர், ஆசிரியர் மற்றும் பல்வேறு பதவிகள் வகிப்போரும் பிற ஊழியர்களும் அடங்குவர். கணிப்பொறி மென்பொருள் அற்புதம் நிகழ்த்தியவர்கள். அவர்கள் எளிதாக ஆங்கிலம் பேசும்

வலிமையற்றவராகவும் இருக்கலாம். உலக வணிகத்தில் உயர்ந்து நிற்கப் போதிய அளவு கணிப்பொறி இயங்கும் கையேட்டைப் படித்து நிபுணத்துவம் பெற்றவர் என்று அப்துல் கலாம் பெருமையடைகிறார்.

04. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்படும் வினாக்களுக்கு விடை தருக.

கல்வி எல்லோர்க்கும் இன்றியமையாதது. பண்டைக் காலத்தில் ஆண்களைப் போலவே பெண்களும் கற்று வல்லவர்களாயும் அறிஞர்களால் மதிக்கப்பட்டவர்களாயும் இருந்தனர், தன் கடமையை உணரவும் தன்னை மேனிலைப்படுத்தவும் ஆணுக்கு கல்வியானது எத்துணை உதவியாயுள்ளதோ பெண்ணுக்கும் அத்துணை உதவியாயுள்ளது. ''கோசல நாட்டுப் பெண்கள் கல்வியும் செல்வமும் உடையவராய் இருந்தமையால் வீடுகள் தோறும் விருந்தும் ஈகையும் சிறந்து விளங்கின'' எனக் கம்பர் கூறுகிறார். ஆனால் இக்காட்சி தமிழ்நாட்டில் நிலைத்திருக்கவில்லை. பெண்கள் அடிமைகள் என்றும், இல்லில் அடங்கியிருப்பவர்கள் என்றும் கருதுங் காலம் வந்துவிட்டது.

பெண்ணுக்கு கல்வி தவிர்க்கப்பட்டது. அஃது ஆண்களுடைய பிறப்புரிமையாகிவிட்டது. பெண்கள் கணவனுக்கு மந்திரிபோல இருக்க வேண்டும் என்றார்கள், பெண்கள் இல்லறத்தை நல்லறமாக்க வேண்டுமென விதித்தார்கள். பெண்களே கணவனுடைய புகழை உயர்த்துபவர்கள் எனவும் புனைந்தார்கள். கணவனுடைய புகழை உயர்த்துபவர்கள் எனவும் புனைந்தார்களே, ஆனால் அவர்களே அறிவைத் தடைப்படுத்தியும் விட்டார்களே! அறிவு வளர்ச்சிக்கு முற்றுப்புள்ளியும் வைத்து விட்டார்கள்! அறிவில்லா நங்கை ஆண்மகனுக்கு புத்தி கூற அறியாள் என அறிந்தாரில்லை! கல்லாத மங்கை கடமையை நன்கு உணராள் என உணர்ந்தாரல்லர்! அம்மட்டோ! கணவனிறந்த பின்பு கையற்றுக் கலங்கும் காரிகை கல்வியறிவில்லாதவளாய் எவ்வாறு தன் வாழ்க்கையை நடத்துவாள் எனவும் ஓர்ந்திலர்.

01. கல்வி ஆண், பெண் இருபாலாருக்கும் உதவும் விதம் யாது?
02. கற்ற பெண்களின் செயல்கள் எவை என கம்பர் குறிப்பிடுகிறார்?
03. பிற்காலத்தில் பெண்கள் கல்லாமைக்கான காரணம் யாது?
04. குடும்பப் பெண்களுடைய கடமைகள் யாவை?
05. பெண் என்பதற்கு நிகராக வழங்கப்பட்டுள்ள சொற்களைக் குறிப்பிடுக.

05. அண்மையில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக முடக்கப்பட்டிருந்த உதயபுரம் எனும் பிரதேசத்தில் அதிகரித்த குப்பை கூழங்கள் வீடுகளிலும் வீதி ஓரங்களிலும் தேங்கிக் கிடந்து பாரியளவிலான சூழல் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. இதனைச் சுட்டிக்காட்டி துப்புரவு செய்து கழிவற்றல் நடவடிக்கையினை கிரமமாக மேற்கொள்ள வலியுறுத்தி உமது கிராம அபிவிருத்தி சங்க செயலாளர் குமாராக உம்மைக் கருதிக் கொண்டு உமது பிரதேச உள்ளூராட்சிமன்றத் தலைவருக்கு 100 சொற்களில் அமையுமாறு ஒரு கடிதம் எழுதுக.

அல்லது

உமது பாடசாலையான கல்முனை கண்ணகி மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற தமிழ்மொழித்தின விழா பற்றிய அறிக்கையினை உமது மொழிநடையில் தமிழ்மொழித்தின விழாச் செயலாளர் குமரன் என உம்மைக் கருதிக் கொண்டு 100 சொற்களில் அமையுமாறு எழுதுக.